# தேசிய சுற்றுச்சூழல் மாத விழா

கிருமாம்பாக்கம், பிப். 12-

அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, தவளக்குப்பம் அரசு மேல்நிலைப் பள்ளி தேசிய பசுமைப்படை சார்பில் தேசிய சுற்றுச்சூழல் மாத விழா நடந்தது.

பள்ளி வளாகத்தில் நடந்த விழாவில், முதல்வர் காத்தான் தலைமை தாங்கி, மூலிகை கண்காட்சியை துவக்கி வைத்தார். தேசிய நல்லாசிரியர் ராமநாதன், சுற்றுச் சூழல் கல்விக் கழக செயலாளர் மோகன்ராஜ் ஆகியோர் மூலிகை, அவற்றின் மருத்துவப் பயன்கள் குறித்து பேசினர்.

மாநில பயிற்சி மைய சிறப்பு பணி அலுவலர் கிருஷ்ணன், சுற்றுச்சூழல் குறித்து சிறப்புரையாற்றினார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. மூத்த விரிவுரையாளர் கண்ணப்பன், ஆசிரியர்கள் கருணாகரன், பிரணவ கேஸ்கர், பரிமளா, தமிழ்ச்செல்வி, கல்யாணசுந்தரம், லதா, ரங்கநாயகி உட்பட பலர் கலந்து கொண்டனர். தேசிய பசுமைப்படை பொறுப்பாசிரியர் அய்யப்பன் நன்றி கூறினார்.